# பத்திரிக்கைச் செய்தி

## பள்ளி, கல்லூரிகளுக்கு குடிநீர் இணைப்பு பெற விண்ணப்பம் வரவேற்பு

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டு குடிநீர் திட்டங்களில் இருந்து அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தனியார் மருத்துவ மனை / கல்வி நிறுவனங்களுக்கு குடிநீர் இணைப்பு பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

கூட்டு குடிநீர் திட்டங்களில் இருந்து தேவைப்படும் தனியார் தொழிற்சாலைகள் / வணிக நிறுவனங்களுக்கு தேவைப்படும் குடிநீர் ஆயிரம் லிட்டர் (கிலோ லிட்டர்) ஒன்றுக்கு ரூ.150/- அளவில் தேவைக்கேற்ப வழங்கப்படும். தனியார் மருத்துவ மனை / கல்வி நிறுவனங்களுக்கு ஆயிரம் லிட்டர் (கிலோ லிட்டர்) ஒன்றுக்கு ரூ.125/- அளவில் வழங்கப்படும். அரியலூர் மாவட்டம் திருமானூர், அரியலூர் தா.பழூர், செயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடம் பகுதிகளில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் செயல்பாட்டில் இருக்கும் இடங்களுக்கு அருகே உள்ள தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் குடிநீர் வடிகால் வாரியத்தை அணுகலாம். விருப்பம் உள்ளவர்கள் அரியலூர், 56 D இராஜாஜி நகர், கல்லூரி சாலையில் அமைந்துள்ள நிர்வாகப் பொறியாளர், ஊரக குடிநீர் திட்டக் கோட்டத்தை அணுகி பயன்பெறலாம். மேலும் விபரங்கள் தேவைப்படின் அலுவலக தொலைபேசி எண் 04329 - 224795 ஐ தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் G.விசுவநாதன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.